1989 ஏப்ரல் 7]

நடைபாதைவாசிகளுக்கு வீடு கட்டும் திட்டம்

44—(*வினா எண் 220)—திரு. துரை சந்திரசேகரன்: மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) தமிழகத்தில் நடைபாதை வாசிகளுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை :

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, (அ) ஆம். சென்னை மாநகரில் நடைபாதையில் வசிக்கும் நடைபாதைவாசிகள் (Pavement dwellers) அவர்களுக்கு மேம்படுத்தப்பட்ட மனைகளில் குடியமர்த்தும் திட்டம் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) சென்னை நகர்ப்புற முக்கியமான சாலைகளில் நடைபாதையில் வசிக்கின்ற மக்களைக் கணக்கெடுக்கின்ற பொழுது 18,228 குடும்பங்கள் இருப்பதாகக் கணக்கிடப் பட்டிருக்கிறது. இந்த மக்களுக்குக் குடியமர்த்தும் திட்டம் தற்போது அரசினுடைய பரிசீலனையில் உள்ளது என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

திரு. துரை சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பம்பாய், டெல்லி போன்ற பெருநகரங்களில் இப்பிரச்சினை எந்த அடிப்படையில் தீர்த்து வைக்கப் பட்டது என்பதை அரசு ஆராய்ந்து, அத்தகைய வழிமுறைகளை சென்னையிலும், மதுரை, கோவை, திருச்சி போன்ற நகரங்களிலும் மேற்கொண்டு நடைபாதைக் குடியிருப்புகளை அகற்ற அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உறுப்பினர் எழுப்பிய வினாவிற்கு, பம்பாய், கல்கத்தா போன்ற நகரங்களுக்குக் குடிசை மேம்பாட்டுக்காக ஐம்பது கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது, தமிழகத்திற்கு அந்தத் தொகை வழங்கப்படவில்லை. மத்திய அரசுக்கு இந்தத் தொகை வழங்கப்பட வேண்டுமென்று நம்முடைய அரசின் மூலமாக வலியுறுத்தியுள்ளோம் என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசையிலே வாழக்கூடிய மக்களுக்காக வீடு கட்டிக் கொடுக்கக்கூடிய இந்தத் திட்டம் எந்த அரசு காலத்தில் கொண்டுவரப்பட்டது ? அந்தத் திட்டம் கொண்டு

வரக்கூடிய அந்தக் காலத்தில் குடிசைவாசிகள் எத்தனை பேர் இருந்தார்கள்? தற்போது எத்தனை குடிசைகள் தமிழகத்திலே இருக்கின்றன என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியில் இந்தியாவிலே முதன்முதலாக மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களால் இந்தக் குடிசை மாற்று வாரிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அந்த நேரத்தில் கணக்குப்படி 1,202 குடியிருப்புகள் இருப்பதாகவும், 1,63,000 குடும்பங்கள் இருப்பதாகவும் கணக்கிடப்பட்டது. அந்தக் காலகட்டங்களிலே 421 குடியிருப்புகளை அகற்றி, குடிசையில் வாழ்ந்த மக்களைக் கோபுரம் போல கட்டப்பட்ட வீடுகளில் 1,14,000 குடும்பங்கள் அன்றைய தினம் குடியமர்த்தப்பட்டது. தற்போதைய கணக்குப்படி சென்னை நகரத்தில் மட்டும் 1,411 குடியிருப்புகள் இருப்பதாகவும், மூன்று இலட்சத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இருப்பதாகவும் கணக்கிடப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 9—50)

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் திருநாட்டிற்கு இமயமலைத் தொடர்ச்சி எப்படி எல்லையாக இருக்கிறதோ, அதைப்போல எழும்பூர் தொகுதிக்கு கூவம் ஆறு எல்லையாக இருக்கிறது. அங்கே வசிக்கிற தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அதன் ஆற்றோரம் அடுக்கு மாடி வீடுகளை கட்டித்தரும் திட்டம் ஏதேனும் அரசிடம் பரிசீலனையில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லையாக மட்டும் தான் இருக்கிறதா, தொல்லையாகவும் இருக்கிறதா? (சிரிப்பு)

திரு. இளம்வழுதி: தொல்லையாகவும் இருக்கிறது.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு: தலைவர் அவர்களே, குடிசைப் பகுதிகளில் மிகவும் பின்தங்கிய பகுதிகளை முதலில் அகற்றி மாடி வீடுகள் கட்டுகிற திட்டம் தற்போது இருக்கிறது. உறுப்பினர் அவர்களுடைய பகுதியை நேரில் ஆய்வுசெய்து அதற்குத் தக்க நடவடிக்கையெடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கைத்தறி நெசவாளர்களுக்குக் குடியிருப்பு கட்டுதல்.

45—(*வினா எண். 542) திரு. ஆர். மூக்கன்: மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—